இதையெல்லாம் ஈடுகட்டுகின்ற வகையிலேதான், இந்தச் சிக்கலே வராமல் இருப்பதற்காக ஏற்பாடு செய்கின்ற வகையிலேதான் தாலுகா மருத்துவமனைகளிலேகூட ஸ்பெஷாலிட்டி விங்ஸ் துவக்கப்பட வேண்டும்; ஸ்பெஷலிஸ்ட்ஸ் அங்கே நியமிக்கப்படவேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். இதைச் செய்து முடிக்கிறபோது இந்தப் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படும். இப்போது கல்லூரி மருத்துவமனைகளிலே ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலேயும் இன்ன படிப்பு படித்தவர்களுக்காக இந்த இடம் என்று நாம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். மற்ற இடங்களிலே அப்படி இல்லை. அதையும் அதேபோல, என்ன படிப்பிற்காக இந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்த டிபார்ட்மெண்டிலே என்ன ஸ்பெஷாலிட்டிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற வரைமுறையைக் கொண்டுவர இருக்கிறோம். இதை ஏற்கெனவே 20 ஆண்டு காலத்திற்கு முன்பாகவே வந்திருக்கவேண்டிய காரியம். வராமல் போன காரணத்தால் இப்போது சிக்கலை நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். இந்த நேரத்திலாவது அதை சரி செய்யவேண்டுமென்ற ஏற்பாட்டில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 145. திரு. டி. வேலையா. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

145—

சித்த, ஆயுர்வேதம், யுனானி மருத்துவ முறைகளை அரசு மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தல்.

** 22138--திரு. டி. வேலையா :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த, ஆயுர்வேதம், யுனானி முறை மருத்துவம் எந்த அளவுக்கு அரசு மருத்துவமனைகளில் நடைமுறையில் உள்ளன ? ;

(ஆ) 1992-93 ஆம் ஆண்டில் இம்முறையில் சிகிச்சை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சில மாவட்ட தலைமை மருத்துவமனை, தாலுகா மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. மூன்று மாவட்ட தலைமை

மருத்துவமனை, 5 அரசு ஆரம்ப சுகாதார நிலையம், சென்னை அறிஞர் அண்ணா மருத்துவமனை ஆகியவற்றில் ஆயுர்வேத மருத்துவமனை இயங்கி வருகிறது. மீஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையம், வேலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் யுனானி பிரிவு செயல்படுகிறது. மேலும் சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் யுனானி மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1992-93 ஆம் ஆண்டில் இம்முறையில் சிகிச்சை பெற்றவர்களுடைய எண்ணிக்கை, சித்தாவில் வெளிநோயாளிகளாக 57,93,207 பேர்; உள்நோயாளிகளாக 1,25,566 பேர். ஆயுர்வேதத்தில் 2,11,328 பேர் வெளிநோயாளிகள்; 19,357 பேர் உள்நோயாள்கள், யுனானியில் 64,039 பேர் வெளிநோயாளிகள், உள்நோயாளிகளாக 15,172 பேர்.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதி முறையில் நல்ல தீர்வு கிடைக்காத கிரானிக் டிசீஸ்களுக்கு சித்தா, ஆயுர்வேத, யுனானி, முறை மருத்துவத்தில் நல்ல மருத்துவமுறைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நாம் இதை முறைப்படுத்தி, அவற்றை ஊக்கப்படுத்தாத காரணத்தால் இந்த முறையில் அதிசயிக்கத்தக்க வகையில் நாங்கள் நோயைக் குணப்படுத்துகிறோம் என்று சொல்லி பொய் டாக்டர்கள், நாட்டிலே போலி மருத்துவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, பொது மக்கள் பயன் அடையும் வகையிலும், இந்தப் போலி மருத்துவர்கள் மக்களைச் சுரண்டுவதைத் தடுக்கிற வகையிலும் இந்த முறையை வைத்து மக்களை மேம்படுத்துவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்திற்காகவே தனியாக ஒரு துறையே ஏற்படுத்தப்பட்டு, ஒரு டைரக்டரேட் ஏற்படுத்தப்பட்டு அந்த டைரக்டரேட்டின் மூலமாக வேகமாக இந்தப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுமக்களிடத்திலேகூட இந்த முறையைப் பயன்படுத்தலாம் என்ற அறிவிப்பும்கூட செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று சித்தா போர்டு ஒன்று அமைக்கப்பட்டு, நம்முடைய முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. அவர்களை அதனுடைய தலைவராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். எனவே, அதை வேகப்படுத்த வேண்டும்; பொதுமக்களுக்கு இதிலே இருக்கிற வசதிகள் தெரியவேண்டும் என்பதற்காக இது செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு விங்கிலும் இதை

பொதுமக்கள் முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10.25

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளிலே படித்து வெளியே வருகிற மாணவர்கள், அவர்கள் மருத்துவர்களான பிறகு அந்தமுறையிலே ஆங்காங்கே 'பிராக்டிஸ்' செய்யாமல் அலோபதி முறையில் பிராக்டிஸ் செய்கிறார்கள். இது பழக்கத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட செய்தி அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுப்பது என்பதில்லை; எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். எந்த எந்த துறையில் யார், யார் பயின்று வருகிறார்களோ அந்தத் துறையிலேதான் அவர்கள் பிராக்டிஸ் செய்ய வேண்டுமென்ற விதியை நாம் கடுமையாகக் கடைப்பிடிக்கிறோம். சித்த மருத்துவத்தைப் படித்துவிட்டு அலோபதிக்குக் கண்டிப்பாகப் போகக்கூடாது. அந்தந்தத் துறையிலேதான் அவர்கள் மருத்துவர்களாக இருந்து பிராக்டிஸ் செய்ய வேண்டும். மீறுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசாங்கம் அப்படிப் பட்டவர்கள்மீது காவல்துறை மூலமாகக்கூட நடவடிக்கை எடுக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்தப் பிரிவிலே படித்துவருகின்ற மாணவர்கள் அவர்கள் படிக்கின்ற மருத்துவத்தை மக்களிடம் பரப்ப வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக அலோபதிக்குப் போகக்கூடாது. அப்படிப் போனால் அவர்கள் படித்த படிப்புக்கே துரோகம் செய்வதாகத் தான் அர்த்தம். அந்தப் படிப்பையே அழித்துவிடுவதாகத்தான் அர்த்தம். என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, எந்த எந்தத் துறையிலே யார், யார் படித்துவருகிறார்களோ அந்தத் துறையிலே பணியாற்ற அவர்கள் தங்களைத் தயாராக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதியில் மருந்து கொடுக்கும்போது மக்களின் வயதுக்கு ஏற்ற 'டோசஸ்' இருக்கிறது. அதைப்போல நாட்டு வைத்தியத்தில் இருக்கிறதா? அது தவிர, அலோபதியில் ஒரு வியாதிக்கு மருந்து கொடுக்கும்போது அந்த வியாதிக்கு மட்டுமே 'கெமிக்கலை' பிரித்து எடுத்து பில்ஸ் ஆகவும் காப்சூல் ஆகவும் செய்து கொடுக்கிறார்கள். அதைப்போல நம்முடைய நாட்டு வைத்தியத்தில் அப்படி செய்வதில்லை. உருண்டையாகவும்

பொடியாகவும் கொடுக்கிறார்கள். ஆனாலும் சாதாரணமாக சில டாக்டர் என்ன சொல்கிறார்கள் என்றால் அலோபதியில் நோய்க்குத் தக்கபடி ஒரு 'பர்ட்டிக்குலர் கெமிக்கலை' மட்டும் பிரித்து கொடுப்பதால் அதனால் 'சைடு எஃபக்ட்' இருக்கிறது; நாட்டு வைத்தியத்தில் மற்ற கெமிக்கல்சும் சேர்ந்து இருப்பதால் சைடு எஃபக்ட் இல்லை என்று சொல்கிறார்கள். இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அத்தனையும் உண்மை. இதிலே ஒரு சைடு எஃபக்டும் கிடையாது. அலோபதியில் சைடு எஃபக்ட் இருக்கிறது. மேலும் சித்த வைத்தியத்தில் உருண்டையாகக் கொடுத்தாலும் பொடியாகக் கொடுத்தாலும் ஒரே எஃபக்ட் தான். அதிலே பிரச்சனை எதுவும் இல்லை. சைடு எஃபக்ட் இல்லாத காரணத்தால் இந்திய மருத்துவத்தை நாம் அதிகமாகப் பயன்படுத்த வேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். இது மிக நல்ல முறை. இதிலே எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி மலைப்பகுதி சித்தர்கள் வாழ்ந்த ஒரு வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மலைப் பகுதி. அந்தப் பழனி மலையைத் தொடர்ந்து இருக்கிற மேற்குத் தொடர்ச்சி மலையில் சித்தர்கள் பயன்படுத்தக்கூடிய மூலிகைகள் பெருமளவில் கிடைக்கக்கூடிய காரணத்தால் பழனியில் இதுவரையில் நடைபெற்றுவந்த சித்த மருத்துவக் கல்லூரியை சிலபல காரணங்களால் சென்னைக்கு மாற்றப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே இதுகாறும் சித்த வைத்தியத்தால் பயன்பட்டு வந்த அந்தப் பகுதி மக்கள் இப்போது அந்த மருத்துவம் கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள். எனவே, பழனியில் மீண்டும் சித்த மருத்துவக் கல்லூரியைத் தொடங்கி, அதற்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலித்து, அரசினுடைய நிதிநிலையை எல்லாம் யோசித்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில மருத்துவ முறையில் ஆரம்ப சுகாதார நிலையம் கிராமங்கள்தோறும் இருந்தாலும் கூட ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய மருத்துவர்கள்

வாரத்தில் ஒருநாள் என்று முகாம் சென்று சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த ஆட்சியில் எந்தத் திட்டங்களானாலும் அது ஏழை எளிய மக்களுக்கு நேரடியாகப் போய் சேர வேண்டுமென்ற முனைப்போடு சிறப்பாக நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிசெய்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த சித்த, யூனானி, ஆயுர்வேத மருத்துவ முறைகளை ஏழை எளிய மக்கள், கிராமப்புறங்களில் இருப்பவர்கள், அவர்களுடைய உடல் நிலைக்கு ஏற்ப, ஒத்துக்கொள்கிற நிலையில் இருப்பதால்,

முற்பகல் 10.30

தமிழக முதலமைச்சர் அவர்கள் பெயரால் சென்று மருத்துவ முகாம் நடத்தியதைபோல இந்த சித்த, யுனானி, ஆயுர்வேத மருத்துவமுறைக்கு உதவுகின்ற வகையில், விரைந்து சிகிச்சை அளிக்க ஒரு நடமாடும் மருத்துவ 'வான்' கொடுத்து, வாரத்தில் ஒரு நாள் இந்த நாட்டு மருத்துவத்தில் பயிற்சி பெற்ற டாக்டர்கள் சென்று சிகிச்சை அளிக்கும் திட்டம் இருக்கிறதா என்றும் வாரத்தில் ஒருநாள் ஒவ்வொரு கிராமத்திற்கும் டாக்டர்கள் சென்று சித்தா டாக்டர்கள் சென்று சிகிச்சை அளிக்கின்ற திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 269 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இந்த சித்த மருத்துவப் பிரிவு துவக்கப்பட்டு, ஓ.பி. மட்டும் நடந்து கொண்டிருக்கிறது. இதைப் படிப்படியாக எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். படிப்படியாக, உடனடியாக முடியாது; நிதிநிலைமை பிரச்சினையெல்லாம் இருக்கிறது. எனவே, படிப்படியாகக் கொண்டு வரலாம் என்று இருக்கிறோம். எனவே, அப்படி வருகிறபோது பொதுமக்கள் அத்தனை பேருக்கும் இது கிடைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பற்றி ஆலோசித்து, நடமாடும் மருத்துவ மனையாகவே வைத்துக் கொண்டிருப்பது கொஞ்சம் கஷ்டம் அது எங்கெங்கே நடமாடுகிறது என்று கண்டுபிடிக்க முடியாமற் போய்விடும். எனவே, தேவையான அளவிற்கு கேம்ப் போல நடத்தி ஏதாவது முயற்சிகளை எடுக்கலாமா என்பதைப் பற்றி ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 146, திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.